RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 59 | மார்ச்.7 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘ராணுவ மோதல்கள் தீர்வாகாது’ போர்களுக்கு முடிவு காண பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி: மார்ச்.7-

மேற்கு ஆசியா மற்றும் உக்ரைன் போர்களுக்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி, ராணுவ மோதல்கள் மூலம் எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது என்பதை பின்லாந்து அதிபர் உடனான சந்திப்பின்போது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு நான்கு நாள் அரசு முறைப் பயணமாக வந்துள்ள பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப்புடன், பிரதமர் மோடி நேற்று விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர்.



அதன் பின்னர் பிரதமர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் கூறியதாவது: இந்தியாவும் பின்லாந்தும் சட்டத்தின் ஆட்சி, பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர வழிமுறைகளில் நம்பிக்கை கொண்டுள்ளன. ராணுவ மோதல்கள் மூலமாக மட்டுமே எந்தவொரு சிக்கலுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது என்பதில் இரு நாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன.

உக்ரைன் விவகாரமாக இருந்தாலும் சரி, மேற்கு ஆசியாவாக இருந்தாலும் சரி, போர்களை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், அமைதிக்கான அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். இரு நாடுகளுக்கும் இடையிலான டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் நிலைத்தன்மை தொடர்பான உறவுகளில் இருவரும் இணைந்து செயல்படுவது என இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு முதல் 6 ஜி தொலைத்தொடர்பு வரை, தூய்மையான எரிசக்தி முதல் குவாண்டம் கம்ப்யூட்டிங் வரை, இந்தத் கூட்டாண்மை இரு நாடுகளிடையே புதிய வேகத்தையும் ஆற்றலையும் வழங்கும்.

மேலும், இந்தியா ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவிற்கும் பின்லாந்திற்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும். இவ்வாறு பிரதமர் மோடி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் அதிக திட்டங்கள் : துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

தென்காசி: மார்ச்.7-

திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் அதிக திட்டங்களை முதல்வர் செயல்படுத்துவார் என்றும், நீங்கள் தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தென்காசி மாவட்டம் இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பல்வேறு துறைகள் மூலம் 7,127 பயனாளிகளுக்கு ரூ.44.05 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் 32 முடிவுற்ற திட்டப் பணிகள் தொடக்க விழா, ரூ.55.93 கோடி மதிப்பீட்டில் 185 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமை வகித்தார். தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் வரவேற்று பேசினார். விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, திட்டப் பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது: இந்த விழாவில் மகளிர் அதிகமாக பங்கேற்றுள்ளீர்கள். உங்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியே திராவிட மாடல் வெற்றிக்கு சாட்சியாக உள்ளது. இந்தியாவிலேயே மகளிர் முன்னேற்றதுக்காக தமிழக முதல்வர் பல முன் மாதிரி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஆட்சிக்கு வந்ததும் மகளிர் விடியல் பயணம் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் தென்காசி மாவட்டத்தில் 12 கோடி பயணங்களை மகளிர் மேள்கொண்டுள்ளனர்.

காலையில் தாய்மார்கள் சமையல் செய்து, பள்ளிக்கு குழந்தைகளை அனுப்ப சிரமப்படக் கூடாது என்பதற்காக பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை கொண்டுவந்தார். தென்காசி மாவட்டத்தில் 12 ஆயிரம் குழந்தைகள் காலை உணவு திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தென்காசி மாவட்டத்தில் சுமார் 18 ஆயிரம் மாணவிகள் பயனடைகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை தமிழக முதல்வர் வழங்கினார். இத்திட்டத்தில் தென்காசி மாவட்டத்தில் 4,000 பேர் பயனடைந்துள்ளனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் 1.31 கோடி பேருக்கு வழங்கப்படுகிறது. தென்காசி மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 3.30 லட்சம் மகளிர் உரிமைத் தொகை பெறுகின்றனர். தேர்தலை காரணம் காட்டி இத்திட்டத்தை நிறுத்த சில பேர் முயற்சி செய்தனர். ஆனால் தமிழக முதல்வர் அதனை முறியடித்து, 1.31 லட்சம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாயை முதல்வர் வழங்கினார்.



மேலும், கோடை கால சிறப்பு நிதியாக விளிம்பு நிலையில் உள்ள முதியோர், கைம் பெண்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.2,000 வழங்கினார். இத்திட்டத்தில் 38 லட்சம் பேருக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களை முதல்வர் செயல்படுத்தியுள்ளார். ரூ.300 கோடி மதிப்பில் சிப்காட் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆலங்குளம் தென்காசி இடையே நான்குவழிச் சாலை திட்டம் ரூ.251 கோடியில் நடைபெறுகிறது. திருநெல்வேலி ஆலங்குளம் நான்குவழிச் சாலை திட்டம் நடைபெற்று வருகிறது. ரூ.15 கோடி மதிப்பில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுளளது.

முற்போக்கான திட்டங்களால் இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது. 11.19 சதவீத வளர்ச்சியுடன் சிறப்பான இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இந்தியாவிலேயே முதல்முறையாக மகளிர் சுய உதவி குழுக்களை ஆரம்பித்தவர் முள்ளாள் முதல்வர் கருணாநிதி. ஆரம்பத்தில் சுய உதவிக் குழுக்கள் மூலம் கடன் இணைப்பு பெற்று, அதை குடும்ப தேவைகளுக்கு பயன்படுத்தி வந்தீர்கள். இப்போது, கடனுதவி வழங்கி உங்களை தொழில் முனைவோராக மாற்றியுள்ளார் தமிழக முதல்வர். மகளிர் குழுக்களுக்கு அடையாள அட்டை புகைப் படத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவி குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை 25 கிலோ வரை 100 கிலோ மீட்டர் வரை கட்டணமின்றி பேருந்துகளில் எடுத்துச் சென்று விற்பனை செய்யலாம். கடந்த 5 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடனுதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி, பெரிய தொழில்முனைவோராகி மற்றவர்களுக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு உங்கள் வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

அரசு அலுவலகங்களை தேடி பட்டா வாங்க காத்திருந்த நிலை மாறி அரசே உங்களை தேடி வந்து பட்டா வழங்குகிறது. வேளாண்துறைக்கு தனி பட்ஜெட் கொண்டுவரப்பட்டது. விவசாயிகள் நலன் காக்கும் அரசாக திராவிட மாடல் அரசு உள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குவதுடன், அவர்களது உரிமைகளையும் உறுதி செய்கிறது. உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளின் குரல் எதிரொலிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேய முதல் மாநிலமாக தமிழகத்தில் நியமன அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்வு செய்யும் முறையை தமிழக முதுல்வர் செயல்படுத்தி உள்ளார்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திராவிட மாடல் அரசு செயல்படுகிறது. மக்களுடன் மக்களாக களத்தில் நிற்கும் ஒரே முதல்வர் நமது முதல்வர். ஒவ்வொரு நாளும் மக்களுக்காக அயராது உழைக்கிறார். அடுத்து வரும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் அதிக திட்டங்களை முதல்வர் செயல்படுத்துவார். இந்த அரசுக்கு பக்கபலமாக இருந்து, தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்க வேண்டும்'' என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இவ்விழாவில் தென்காசி தொகுதி எம்.பி டாக்டர் ராணி ஸ்ரீகுமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.பழனி நாடார், ஈ.ராஜா, டாக்டர் சதன் திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## கண்டன ஆர்ப்பாட்டம்

சிவகங்கை மாவட்டம். மானாமதுரை ஒன்றியம். இடைகாட்டூர் கிராமம். தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்த ராசு என்பவரை சாதி வெறியர்கள் கொலை வெறி தாக்குதல் நடத்தினார்கள் படுகாயத்துடன் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார். இன்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் சந்தித்து விசிக உறுதுனையாக இருக்கும் என்று ஆறுதல் கூறினோம். தலைவர் எழுச்சி தமிழர் அவர்கள் நடந்த சம்பவத்தை பற்றி கேட்டறிந்தார். விசிக சார்பாக சிவகங்கை மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெறும் சாதிய வன்கொடுமைகளை கண்டித்து சிவகங்கை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.




- வழக்கறிஞர் வே.பாலையா மாவட்ட செயலாளர் மானாமதுரை தொகுதி.சிவகங்கை மாவட்டம்.

## பொது அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள தெ.புதுக்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர் வழக்கறிஞர் கோபி அவர் மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் கடந்த 2021 ஆண்டு முதல் மனைவி இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்ததாக கூறி அவரது மனைவி சிவகங்கை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் வழக்கறிஞர் கோபி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு சிவகங்கை மாவட்டம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் உள்ள கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது ,இந்த வழக்கை ரத்து செய்ய கோரி வழக்கறிஞர் கோபி மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.இந்த வழக்கை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் நீதியரசர் விக்டோரியா கௌரி அவர்கள் வழக்கறிஞர் கோபி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் பதிவு செய்த வழக்கை இன்று ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

## “திருச்சி மாநாட்டில் முக்கிய அறிவிப்புகளை முதல்வர் வெளியிடுவார்'' அமைச்சர் கே.என்.நேரு

திருச்சி: மார்ச்.7-

"திருச்சி மாநாடு முழுக்க திமுக மாநாடு. கூட்டணி கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா ? என்பது குறித்து எனக்கு தெரியாது" என்று அமைச்சர் கே.என்.நேரு கூறியுள்ளார்.



திருச்சி மாவட்டம் சிறுகனூரில் வரும் 9ம் தேதி நடைபெறும் திமுக மாநில மாநாட்டு திடலை நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கே.என்.நேரு கூறுகையில், ‘‘முதல்வர் ஸ்டாலின் கடந்த 2021ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் இதே இடத்தில், பாசனம், மருத்துவம், கல்வி வசதி உள்ளிட்ட 7 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு வெற்றி பெற்றார்.

அதேபோன்று இந்த மாநாட்டிலும் தமிழக நிதிநிலைக்கு ஏற்ப வருங்கால திட்டம் குறித்த அறிவிப்புகளை வெளியிடுவார். மாநாட்டில் 10 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று லட்சம் நாற்காலிகள் போடப்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வண்ணம் விரிவான ஏற்பாடுகளை காவல்துறை செய்துள்ளது. எனவே போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்பில்லை. 10 மருத்துவக் குழுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அனைவருக்கும் குடிநீர், கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 24 ஆயிரம் வாகனங்கள் வரும் என போலீஸ் சார்பில் கூறப்பட்டுள்ளது. போதுமான வாகன நிறுத்தும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க திமுக மாநாடு. கூட்டணி கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியாது. திமுக தலைவர் ஸ்டாலின் தான் தெரிவிப்பார். முதல்வர் ஸ்டாலின் மாலை 5.30க்கு மணிக்கு மாநாட்டு திடலுக்கு வருவார்'' என்று கூறினார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## நாங்குநேரி இரட்டை கொலை: உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க கோரி முறையீடு

மதுரை: மார்ச்.7-

நாங்குநேரி இரட்டை கொலை சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரி நீதிபதிகளிடம் வழக்கறிஞர் ஒருவர் முறையீடு செய்தார்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி காவல் சரகம், பெரும்பத்து பஜாரில் இரவு பைக்கில் வந்த 9 பேர் கொண்ட மர்ம கும்பல், அங்கு டீ கடை அருகே சாலையில் நின்று கொண்டிருந்த பொதுமக்களை சரமாரியாக வெட்டியது. இந்தச் சம்பவத்தில் வடமாநில செங்கல் சூளை தொழிலாளி உள்பட இரண்டு பேர் பலியாகினர். கண்மூடித்தனமாக வெட்டியதில் 6 பேருக்கு பலத்த வெட்டுக் காயம் விழுந்தது.



இந்தக் கொடூர தாக்குதலில் பெரும்பத்து இந்திரா காலனியை சேர்ந்த ஜான் (42) மற்றும் வட மாநில செங்கல் சூளை தொழிலாளி திருநாத் கட்டா ஆகிய இரண்டு பேரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே இறந்தனர். பெரும்பத்து பகுதியைச் சேர்ந்த ஆபிரகாம் மகன் நெல்சன் (58), பால்வண்ணன் மகன் பிரபாகரன், வைகுண்டம் மகன் ராமசாமி, வீராங்குளம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் கணேசன் (53) ஆகியோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து 9 பேரை கைது செய்து உள்ளனர். இந்த நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வு இன்று காலையில் வழக்குகளை விசாரிக்க தொடங்கியது.

அப்போது, வழக்கறிஞர் ஆயிரம் கே.செல்வகுமார் என்பவர் நீதிபதிகள் முன்பு ஆஜராகி, ‘நாங்குநேரியில் வடமாநில தொழிலாளி உட்பட இரண்டு பேர் கொல்லப்பட்டதற்கு தமிழக அரசு சார்பில் இதுவரை எந்த நிவாரணமோ, இழப்பீடோ அறிவிக்கப்படவில்லை.

புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பத்தின் துயரங்களைக் கருத்தில் கொண்டு, எந்தக் காரணமும் இல்லாமல் கொலை செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளியின் குடும்பத்துக்கு தேவையான நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும், இந்த விவகாரத்தை நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும்’ என்று முறையிட்டார்.

பின்னர் நீதிபதிகள், இந்த விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு குறித்து உரிய அதிகாரிகளிடம் கேட்டு அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

# திருவாடானை அருகே காரங்காடு கிராமத்தினர் தேர்தல் புறக்கணிப்பு அறிவிப்பு: நில அளவை விவகாரத்தில் காரங்காடு கிராம மக்கள் ஆவேசம்

திருவாடானை. மார்ச்.07-

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரங்காடு கிராம மக்கள், வரவிருக்கும் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததைக் கண்டித்து இந்த அதிரடி முடிவை அவர்கள் எடுத்துள்ளனர்.




கிராம மக்கள் திருவாடானையில் பேருந்து நிலையம், மருத்துவமனை அருகில் என மக்கள் கூடும் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் காரங்காடு கிராமத்தில் உள்ள மாதா கோவில் இடம் மற்றும் ஊராட்சி எல்லையை அளந்து காட்ட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் மிக நீண்ட கால கோரிக்கையாக இருந்து வருகிறது.

நிலத்தை அளந்து தருவதாக தேதி குறித்துவிட்டு, தொடர்ந்து தட்டிக் கழித்து வரும் வருவாய்த்துறையின் மெத்தனப் போக்கை கிராம மக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். பலமுறை கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காததால், தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக இந்தத் தேர்தல் புறக்கணிப்பு முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

"வருவாய்த்துறையைக் கண்டித்தும், கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் தேர்தலைப் புறக்கணிக்க காரங்காடு கிராமப் பொதுமக்கள் ஒருமனதாக முடிவு செய்துள்ளோம்" என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நெருங்கும் வேளையில், ஒரு கிராமமே ஒட்டுமொத்தமாக தேர்தல் புறக்கணிப்பு முடிவை அறிவித்திருப்பது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# புழல் சக்திவேல் நகரில் திய நியாயவிலை கடை திறப்பு விழா

மாதவரம், மார்ச். 7-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி 23வது வார்டுக்குட்பட்ட புழல் சக்திவேல் நகர் 2வது பிரதான சாலையில் புதிய நியாயவிலை கடை திறப்பு விழா கூட்டுறவு சங்க துணை பதிவாளர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.





சார்பதிவாளர் மணிகண்டன், கள ஆய்வாளர் ஜெயராம கிருஷ்ணன், பொது மேலாளர் நீதிராஜன், மேலாளர் தணிகாசலம், பகுதி மேலாளர்கள் ஜெயக்குமார், செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு புதிய நியாயவிலை கடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருட்களை வழங்கினார். இதில் சக்திவேல் நகர் மற்றும் கிருஷ்ணா நகர் குடியிருப்போர் சங்க தலைவர் தலைவர் புழல் சிவக்குமார், 23வது வட்டச் செயலாளர் சந்துரு, முன்னாள் வட்டச் செயலாளர் புழல் சரவணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், கூட்டுறவு சங்க அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.





# விளாங்காடுபாக்கம் ஊராட்சி கண்ணம்பாளையம் பகுதில் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழாபொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், மார்ச். 7-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி கண்ணம்பாளையம் நாகாத்தம்மன் கோயில் அருகே தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாள் விழா சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி ஆதிதிராவிட நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் பாரதி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் அற்புதராஜ் கலந்துகொண்டு கட்சி கொடியினை ஏற்றிவைத்து பின்னர் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புடன் கூடிய அறுசுவை அன்னதானத்தை வழங்கினார். இதில் திமுக அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# திருவையாறு பகுதியில் புதிய நூலகம் கட்ட நிதி ஒதுக்க வேண்டும் வாசகர்கள் கோரிக்கை

தஞ்சாவூர் மார்ச். 7-

திருவையாறு அரசு முழுநேர கிளை நூலகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நூலகத்திற்கான புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டிடம் கட்டும் பணியை தொடங்க வேண்டும் என்று நூலக வாசகர்கள், பொதுமக்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். திருவையாறு நகரில் 1960ம் ஆண்டு அரசு கிளை நூலகம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்த நூலகம் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. பின்னர் 2012ம் ஆண்டு முதல் சத்திரம் நிர்வாகத்திலுள்ள அரசர்கல்லூரி வளாகத்தில் ஒரு பகுதியில் உள்ள கட்டிடத்திற்கு நூலகம் இடமாற்றம் செய்யப்பட்டு பழைய ஓட்டு கட்டடத்தில் கிளை நூலகம் முழு நேரமாக இயங்கி வருகிறது.




இந்த நூலகத்தில் சுமார் 6005 உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு சுமார் 40,000 நூல்களுக்கும் மேல் உள்ளது நாள்தோறும் 100க்கு அதிகமான பொதுமக்கள், வாசகர்கள் வந்து படித்து செல்கின்றனர். கடந்த 2017ம் ஆண்டுமுதல் போட்டி தேர்வுக்கு செல்லும் மாணவர்களுக்காக தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டு அதில் கம்ப்யூட்டர் வசதியுடன் அனைத்து போட்டி தேர்வுக்கான கேள்வி, பதில் கம்ப்யூட்டர் மூலம் பிரின்ட் எடுத்து படித்து வருகின்ற னர். மேலும் இந்த கம்ப்யூட்டர் அறையில் போட்டி தேர்வில் கலந்து கொள்வதற்காக ஆன்லைன் பதிவு

நடை பெறுகிறது. இதை படித்த பட்டதாரிகள் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு போட்டி தேர்வுக்கு படித்த பலர் வெற்றி பெற்று அரசு பணியில் பணியாற்றி வருகின்றனர். நூலகத்தில் போட்டி தேர்வுக்கான அனைத்துபுத்தகங்களும், பள்ளி,கல்லூரி

மாணவர்களுக்கு தேவையான இலக்கியம், வரலாறு புத்தகங்கள் நுலகத்தில் உள்ளது. இந்தநூலகத்தில்நூலகர் ஒருவரும் தினக்கூலி அடிப்படையில் இரண்டு பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த நூலகம் பழைய கட்டிடத்தில் இயங்கி வருவதால் கட்டிடத்தில் பல்வேறு பகுதிகள் மேற்கூரைகள் பெயர்ந்து விழுந்து எந்த நேரமும் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது மழை காலங்களில் மழை நீர் இறங்கி புத்தகங்கள் வீணாகும் அவல நிலை ஏற்படுகிறது. இதனால் முழு நேர அரசு கிளை நூலகத்திற்கு அரசு புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று வாசகர்கள் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து கடந்த 2023 ம் ஆண்டு மார்ச் மாதம் திருவையாறு நூலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா பூதலூரில் நடந்தது. அடிக்கல் நாட்டப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டது. அடிக்கல் நட்ட போது நூலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்படவில்லை பின்னர் அப்போது பணியில் இருந்த நூலகர் கிளை நூலகத்திற்கு தேவையான இடத்தை பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டு திருவையாறு திருமஞ்சன வீதியில் அரசுக்கு சொந்தமான இடத்தில் 10 சென்ட் நிலம் மாவட்ட நிர்வாகம் ஒதுக்கீடு செய்தது பின்னர் அந்த இடம் தற்போது நூலக துறைக்கு மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது கிளை நூலகத்திற்கு தேவையான இடம் இருந்தும் இது வரை அரசு கிளை நூலக கட்டிடம் கட்டுவதற்கான எந்த ஒரு நிதி ஒதுக்கீடும் செய்யவில்லை பொதுநூலக துறையும் தங்கள் நிதியிலிருந்து கட்டிடம் கட்ட எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யவில்லை. இது நூலக வாசகர்கள், பொதுமக்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் பொது நூலகத்துறை அல்லது உள்ளாட்சி நிதியிலிருந்து கிளை நூலகட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து கிளை நூலக கட்டிடம் கட்டப்படுமா?என்று நூலகவாசகர்கள், பொதுமக்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

இது குறித்து தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும், பொது நூலக துறையும் புதிய நூலக கட்டிடம் கட்டுவதற்கு தேவையான உரிய நிதியை ஒதுக்கீடு செய்து திருவையாறு அரசு முழு நேர கிளை நூலகத்திற்கான புதிய கட்டிட பணிகளை தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாசகர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# தைப்பூச திருநாளில் சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களை கௌரவப்படுத்தும் நிகழ்ச்சி

ஒட்டன்சத்திரம் மார்ச் 7-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தைப்பூசத் திருவிழாவினை முன்னிட்டு சிறப்பாக பணியாற்றிய திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை சேர்ந்த தூய்மைப் பணியாளர்களை கௌரவிக்கும் வகையில் நடைபெற்ற பாராட்டு விழாவினை தொடங்கி வைத்த நிகழ்ச்சியில் உரையாற்றினார். அருகில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், பழனி வருவாய் கோட்டாட்சியர் இரா.கண்ணன், ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் சுவேதா, ஒட்டன்சத்திரம் நகராட்சி பொறியாளர் திரு.சுப்பிரமணிய பிரபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபு பாண்டியன், காமராஜ், தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் தாஹிரா, ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் திருமலைசாமி, துணைத்தலைவர் வெள்ளைசாமி அவர்கள் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.




# 32 கிலோ கஞ்சா பறிமுதல் கடத்தி வந்த இருவர் கைது

## அம்பத்தூர் மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் ஜெகநாதன் அதிரடி நடவடிக்கை

மாதவரம், மார்ச். 7-

ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட பகுதிகளில் அரசால் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையிலான போலீசார் பட்டரவாக்கம் இரயில் நிலையம் அருகில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது அங்கு வந்த சந்தேக நபர்களான மேகலயா மாநிலத்தை சேர்ந்த டென்ஞ்சாக்25, பார்கிஸ்33 ஆகிய இருவரிடமும் விசாரணை செய்து சந்தேகத்தின் பேரில் மேற்படி குற்றவாளிகளை சோதனை செய்ததில் குற்றவாளிகளிடம் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 32 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து கஞ்சாவை கைப்பற்றி இருவரையும் கைது செய்யப்பட்டு மேலும் விசாரணை செய்ததில் குற்றவாளிகள் இருவரும் அசாம் மாநிலத்தில் இருந்து கஞ்சாவை வாங்கி கடத்தி வந்தது தெரியவந்தது. பின்னர் இருவர் மீது அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.

# மாநகராட்சி அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பு பயிற்சி திட்டம்..6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசி அசத்துகின்றனர்

தாம்பரம் மார்ச். 7-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பள்ளிகளில் “கற்கை நன்றே” ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தாம்பரம் ஷி தாம்பரம் மாநகராட்சி பள்ளிகளில் தொடங்கப்பட்ட “கற்கை நன்றே” ஆங்கிலப் பேச்சுத் திறன் மேம்பாட்டு திட்டம் தற்போது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.



தாம்பரம் மாநகராட்சியின் வழிகாட்டுதலுடன், கிரெசென்டியா கல்வி சார்டபிள் டிரஸ்ட் அமைப்பின் செயல்பாட்டில் இந்த திட்டம் 27 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த வகுப்புகளில் 6,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர். அனுபவமிக்க பயிற்சியாளர்கள் மூலம் மாணவர்களுக்கு நடைமுறை அடிப்படையிலான பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்த ஆங்கில பயிற்சி வகுப்பில் உரையாடல் பயிற்சி, சரியான உச்சரிப்பு, சொல்வளம் வளர்ப்பு, குழு விவாதம், மேடைப் பேச்சு தைரியம் ஆகியவை மாணவர்களுக்கு ஆங்கில ஆசிரியர்களால் கற்று கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக

மாணவர்கள் ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையுடன் பேச ஆரம்பித்துள்ளனர் என்று தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர்.

இது தொடர்பாக கிரெசென்டியா கல்வி சார்டபிள் டிரஸ்ட் நிர்வாகம் தெரிவித்ததாவது:

“மாணவர்கள் மொழித் திறன் பெற்றால் அவர்கள் எதிர்காலம் உறுதி பெறும். இந்த திட்டம் அவர்களின் நம்பிக்கையை உயர்த்தும் ஒரு மாற்றுத் தொடக்கம்.”

இந்தத் திட்டம் மாணவர்களின் கல்வித் தரத்தையும், தொடர்புத் திறனையும் உயர்த்தும் முக்கிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.

இந்த வாய்ப்பை வழங்கி, திட்டம் சிறப்பாக நடைபெற ஆதரவு அளித்த

தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலசந்தர் அவர்களுக்கும், மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி அவர்களுக்கும் கிரெசென்டியா கல்வி சார்டபிள் டிரஸ்ட் சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்படுகின்றன.



# அரசு பொதுத்தேர்வு எழுதும் மாணவிகளுக்கு கல்வி உபகரணம் ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கல்

மாதவரம், மார்ச்.7-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சியில் இயங்கிவரும் அரசு ஆதிதிராவிட நல பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 2025 2026 ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவிகளுக்கு அன்னை தெரசா அன்பு சேவை அறக்கட்டளையின் நிறுவனர் வழக்கறிஞர் ஆர்.டில்லிபாபு தலைமை ஏற்று கல்வி உபகரணங்கள் மற்றும் ஊட்டச்சத்து பொருட்களை வழங்கினார். இதில் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கந்தசாமி, துணை செயலாளர் நேதாஜி, அறக்கட்டளை பொருலாளர் யுவராஜ், வழக்கறிஞர் சந்தோஷ் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர் வெங்கட்ரவி உள்ளிட்ட ஆசிரியர்கள் உடனிருந்தனர்.



# மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் விழா

ஒட்டன்சத்திரம் மார்ச். 7-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் 66 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணிகளை வழங்கினார். அருகில், மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், ஒட்டன்சத்திரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி அலுவலர் (பொறுப்பு) தசி.ரமாதேவி உட்பட ஆசிரியர் பெருமக்கள், மாணவ, மாணவியர்கள் பலர் உள்ளனர்.



# பழனியில் வருத்தமில்லா வாலிபர் சங்கத்தின் சார்பாக கலந்தாய்வுக் கூட்டம்

திண்டுக்கல், மார்ச்.7-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தேரடி பகுதியில் உள்ள வருத்தமில்லா வாலிபர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் மாரியம்மன் மாசி திருவிழாவை முன்னிட்டு 51 ஆம் ஆண்டு வருத்தமில்லா வாலிபர் சங்கத்தின் சார்பாக கலை நிகழ்ச்சி நடைபெற உள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் குறித்து கலந்தாய்வு கூட்ட நிகழ்ச்சி நடைபெற்றன.தொடர்ந்து 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த சங்கம் ஆண்டுதோறும் திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் கோயில் திருவிழா போல் பழனி மாரியம்மன் கோயில் மாசி திருவிழாவை விமர்சையாக கொண்டாடும் வகையில் கலை நிகழ்ச்சிகள் பல்வேறு திரைப்பட நட்சத்திரங்கள் மற்றும் பட்டிமன்ற பேச்சாளர்கள் சின்னத்துரை நட்சத்திரங்களை அழைத்து வந்து விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் 51 ஆம் ஆண்டை முன்னிட்டு வருகின்ற 8ம் தேதி ஞாயிறு கிழமை மாலை 8.00 மணி அளவில் தேரடி திடலில் வருத்தமில்லா வாலிபர் சங்கத்தின் கலை நிகழ்ச்சியில் இசை அமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா கலந்து கொண்டு கலை நிகழ்ச்சி நடைபெற உள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் குறித்தும் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் நிர்வாகிகள் பல்வேறு கருத்துக்களை கலந்து ஆலோசிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றன.மேலும் இவ்விழாவை அனைத்து பொதுமக்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்தனர்..

# சிறுவன் மூளைச்சாவு அடைந்த நிலையில், அவரின் உறுப்புகளை தானமாக அளித்த பெற்றோர்..!!

ஈரோடு, மார்ச.7-

வலிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மௌலீஷ் (12) என்ற சிறுவன் மூளைச்சாவு



அடைந்த நிலையில், அவரின் கல்லீரல், சிறுநீரகங்கள் உள்ளிட்ட உறுப்புகளை தானமாக அளித்த பெற்றோர். இதன் மூலம் 5 பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்டம் சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும், பழங்குடியின மக்களிடையே, போதைப்பொருள் தடுப்பு, மற்றும் வாக்காளர்கள் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

நீலகிரி.மார்ச். 7-

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட கப்பாலா, திருமங்கலம், பிஆர்எப் காலனி ஆகிய பகுதியில், வசிக்கும் பழங்குடியின மக்களிடையே, போதைப்பொருள் தடுப்பு மற்றும் வாக்காளர்கள் வாக்களிப்பதின் அவசியம் குறித்தும், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, முன்னிலையில், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: நீலகிரி மாவட்டம் பந்தலூர் வட்டத்திற்குட்பட்ட கப்பாலா, திருமங்கலம், பிஆர்எப் காலனி ஆகிய பகுதிகளுக்கு காவல் துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், ஊராட்சித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட துறை அலுவலர்கள் நேரடியாக வருகை தந்து போதை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் மற்றும் விளைவுகள் குறித்து தங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. மேலும், குழந்தைகளுக்கு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படும் பட்சத்தில் கட்டணமில்லா எண்ணான 1098 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறும், அதேபோல் பெண்களுக்கு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படும் போது உடனடியாக 181 என்ற கட்டணமில்லா எண்ணில் புகார்கள் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கப்படும் புகார்கள் காக்கப்படுவதோடு, சம்மந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கையும் மேற்கொள்ள ரகசியம்

ஏதுவாக இருக்கும் எனவும், நடைபெறுவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்குப்பதிவு நாளன்று வாக்களிக்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.மேலும், போதைப்பொருள் தடுப்பு குறித்து தர்மபுரி மாவட்டத்தை சார்ந்த கலை நிலா கிராமிய குழவினர், கூடலூர் அரசு கலைக்கல்லூரியின் மாணவிகள், கோத்தகிரியை சார்ந்த சமூக ஆர்வலர் நிர்மலா பொம்மலாட்டம் மற்றும் பழங்குடியின பள்ளியை சார்ந்த மாணவிகள் ஆகியோர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பிரம்ம வித்ய நாயகி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# ஜம்புகுட்டப்பட்டியில் கல்வெட்டு மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகள்- எம்.எல்.ஏ. மதியழகன் பூமி பூஜை

கிருஷ்ணகிரி, மார்ச். 07-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி தெற்கு ஒன்றியம் ஜம்புகுட்டப்பட்டி ஏரிக்கரையில் கல்வெட் மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு பூமி பூஜை செய்து பணிகள் தொடங்கப்பட்டன.இந்த திட்டத்தின் கீழ் ஜம்புகுட்டப்பட்டி ஏரிக்கரையில் ரூ.10.8 இலட்சம் மதிப்பீட்டில் கல்வெட் அமைக்கும் பணியும், பழைய போச்சம்பள்ளி முதல் காலனி வரை ரூ.18.30 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான திரு.தே. மதியழகன், எம்.எல்.ஏ., அவர்கள் பூமி பூஜை செய்து இனிப்புகள் வழங்கி தொடங்கி வைத்தார். பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சாலை மற்றும் கல்வெட்டு பணிகள் விரைவாக நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் சாந்த மூத்தி, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சரவணன், ஆதிமூலம், ரைஸ்மில் பாலு, சம்தீன், திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு திட்டம் தொடங்கப்பட்டதை வரவேற்றனர்.பணிகள் நிறைவேறிய பின் அந்தப் பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதி மேம்பட்டு பெரிதும் பயன் அளிக்கும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.



■ திண்டுக்கல் சரகத்திற்கு காவல்துறை துணைத் தலைவராக மருத்துவர் கூஷி.சசிமோகன். பொறுப்பேற்றுக் கொண்டார்கள். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப். மற்றும் மாவட்ட பயிற்சி காவல் கண்காணிப்பாளர் செல்வி.ரி.நேஹா., காவல்துறை துணைத் தலைவர் அவர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள்.



# தமிழ்நாட்டில் ஏப்ரல் 15க்கு பிறகு தொண்டர்கள் மற்ற வேலைகளை பார்க்கலாம்: பாஜக பொதுச் செயலாளர் சந்தோஷ் பேச்சு

சென்னைஇ மார்ச்.7-

தமிழ்நாட்டில் ஏப்ரல் 15க்கு பிறகு தொண்டர்கள் மற்ற வேலைகளை பார்க்கலாம் என பாஜக பொதுச் செயலாளர் சந்தோஷ் தெரிவித்தார். சென்னையில் நடைபெறும் பாஜக வெளிமாநில பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சந்தோஷ் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் ஒரு கோடிக்கும் மேலாக பிற மொழி பேசும் மக்களைக் கவர வியூகம் தேவை என பி.எல். சந்தோஷ் கூறியுள்ளார். தெலங்கானா, ஆந்திரா, கர்நாடகாவில் சிறப்பாக செயல்பட்டவர்கள், தொகுதிப் பொறுப்பாளராக நியமிக்கப்படுவர் என அவர் கூறினா

# கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு தலை குனியாது பொதுக்கூட்டம்

கிருஷ்ணகிரி, மார்ச். 07-

கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நடந்த தமிழ்நாடு தலை குனியாது பொதுக்கூட் டத்தில் திமுக கொள்கை பரப்பு செயலாளர் சபாபதி மோகன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.




கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகேயுள்ள அண்ணா சிலை எதிரில், கிழக்கு மாவட்ட திமுக சார்பில், "தமிழ்நாடு தலை குனியாது" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., தலைமை வகித்தார். நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி ஆகியோர் வரவேற்றனர். ஒன்றிய செயலாளர்கள் மற்றும் பேரூர் செயலாளர்கள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், திமுக கொள்கை பரப்பு செயலாளரும், முன்னாள் துணை வேந்தருமான சபா பதிமோகன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில், முன்னாள் எம்எல்ஏ செங்குட்டுவன், மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் தேவகுமார், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன்,மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சித்ரா சந்திர சேகர், நாகராசன், கோதண்டன், பாலன், இளைஞரணி தினேஷ்ராஜன், நிர்வாகிகள் வாசுதேவன், சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பட்டியலின மக்கள் மீது தொடரும் கொடூரத் தாக்குதல்: திமுக அரசிற்கு ஆதித்தமிழர் முன்னேற்றக் கழகம் கடும் கண்டனம்!

மானாமதுரை மார்ச். 07-

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதோடு, பட்டியலின மக்கள் மீதான சாதி வெறித் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக ஆதித்தமிழர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஆ.நாகராசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

தொடரும் வன்முறைச் சம்பவங்கள்

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே உள்ள பெரும்பத்து கிராமத்தில் 9 பேர் கொண்ட மர்ம கும்பல் புகுந்து கண்மூடித்தனமானத் தாக்குதலை நடத்தியது. அந்த அதிர்ச்சி விலகும் முன்பே, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூர் கிராமத்தில் பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதிக்குள் புகுந்து சமூக விரோதிகள் கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

நிர்வாகத் திறனற்ற ஆட்சி

திமுக அரசின் நிர்வாகத் திறமையின்மையால் சாதி வெறியர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். பட்டியலின மக்களைத் தொடர்ந்து அச்சத்திலும், பதற்றத்திலும் வைத்திருப்பதுதான் இந்த அரசின் சாதனையா? தமிழகத்தை ஒரு பதற்றமான நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் என்று திமுக அரசு நினைக்கிறதா என ஆ.நாகராசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூக நீதியை காக்க அறைகூவல்

"சட்டம் ஒழுங்கு என்பது ஒரு பிரச்சினையே இல்லை என்பது போல கடந்த ஐந்து ஆண்டுகளைக் கடந்துவிட்ட, எதற்கும் தகுதியில்லாத முதல்வரின் அவல ஆட்சிக்குத் தமிழக மக்கள் முற்றுப்புள்ளி வைக்கும் நாள் நெருங்கிவிட்டது.

சமூக அநீதி இழைக்கும் திமுக அரசை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, உண்மையான சமூக நீதியைப் போற்றும் அதிமுக அரசை அரியணையில் அமர்த்த மக்கள் தயாராகிவிட்டனர்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவகங்கையில் ரூ. 2.03 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகள்: அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அடிக்கல் நாட்டினார்

சிவகங்கை மார்ச் . 07-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ், மொத்தம் ரூபாய் 2.03 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்குக் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.



திட்ட விவரங்கள்: கீழ்க்கண்ட கிராமங்களில் புதிய சமுதாயக்கூடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது: * காரையூர் (திருப்பத்தூர் ஒன்றியம்): ரூ. 53 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம். * எருமைப்பட்டி (சிங்கம்புணரி ஒன்றியம்): ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம். * சந்திரிபட்டி (எஸ். மாம்பட்டி ஊராட்சி): ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம். * ஜெயங்கொண்டநிலை: ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் சிறு சமுதாயக்கூடம். * மல்லாகோட்டை: ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் சிறு சமுதாயக்கூடம்.

அமைச்சர் ஆற்றிய உரை: நிகழ்ச்சியில் பணிகளைத் தொடங்கி வைத்துப் பேசிய அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், "தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தமிழக அரசு அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி வருகிறது. பொதுமக்களின் தேவைகளை அறிந்து, கோரிக்கைகளுக்கு முன்பாகவே வளர்ச்சிப் பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அரசின் திட்டங்கள் மட்டுமன்றி, எனது சொந்த நிதியிலிருந்தும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் 16 பணிகள் நடைபெறவுள்ளன. இதில் அரசின் சார்பில் மூன்றில் இரண்டு பங்கும், எனது சொந்த நிதியிலிருந்து ஒரு பங்கும் வழங்கப்பட்டு இப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 'எல்லோருக்கும் எல்லாமும்' என்ற அடிப்படையில் செயல்படும் இந்த அரசுக்கு பொதுமக்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும்," எனத் தெரிவித்தார்.பங்கே கற்பாளர்கள்:இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சண்முகவடிவேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இராஜேந்திர குமார், குமுதம் (திருப்பத்தூர்), முனியராஜ் (சிங்கம்புணரி) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கீழமேல்குடி பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தினர் தீவிர களப்பணி



மானாமதுரை மார்ச். 07-

தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை முழக்கமான "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதற்கேற்ப, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழமேல்குடி பகுதியில் கட்சியின் மகளிர் அணியினர் மற்றும் நிர்வாகிகள் இணைந்து தீவிர களப்பணியில் ஈடுபட்டனர். கழகத் தலைவர் விஜய், பொதுச்செயலாளர் ஆனந்த் மற்றும் மாவட்டச் செயலாளர் எஸ். முத்துபாரதி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இந்த நிகழ்வு நடைபெற்றது. மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் சரண்ராஜ் வழிகாட்டுதலின்படி, மாவட்ட மகளிர் அணித் தலைமை தமிழரசி பிரதீப் தலைமையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

களப்பணியில் பங்கேற்ற நிர்வாகிகள்: மாவட்ட மகளிர் அணி: இணை அமைப்பாளர்கள் திவ்யபாரதி, சுதா, ராஜலட்சுமி. ஒன்றிய மகளிர் அணி: அமைப்பாளர்கள் சித்ரா, லதா மற்றும் இணை அமைப்பாளர்கள் நிரோஷா, மகாலட்சுமி. நகர மகளிர் அணி: அமைப்பாளர் கலாதேவி.

நிர்வாகிகள்: ஒன்றிய இணை அமைப்பாளர் முருகானந்தம், ஒன்றிய நிர்வாகி சுதா, பூத் செயலாளர் முத்துப்பாண்டி. கீழமேல்குடி பகுதியில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்த நிர்வாகிகள், கட்சியின் கொள்கைகளை விளக்கி கலந்துரையாடினர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னை வர்த்தக மையத்தில் உங்கள் கனவ சொல்லுங்க திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம் டோக் பெருமாட்டி கல்லூரியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., ஆகியோர் வாயிலாக பங்கேற்றனர்.

# வேளச்சேரி பரங்கிமலை தடத்தில் பாதுகாப்பு ஆணையர் நடத்திய அதிவேக சோதனை ஓட்டம் வெற்றி

சென்னை, மார்ச்.7-

வேளச்சேரி பரங்கிமலை பறக்கும் ரயில் வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர் ஜனக் குமார் கர்க் அதிவேக ஏசி மின்சார ரயில் மூலமாகசோதனை ஓட்டத்தை மேற்கொண்டார். இது வெற்றிகரமாக நிறைவடைந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.



சென்னை கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் (மேம்பால ரயில் வழித்தடம்) தடத்தை பரங்கிமலை வரை 5 கி.மீ. தொலைவுக்கு நீட்டிக்கும் பணி 17 ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவடைந்துள்ளது.

இதையடுத்து, இத்தடத்தில் கடந்த ஆண்டு நவ.7, டிச.15 ஆகிய தேதிகளில் அடுத்தடுத்து சரக்கு ரயில்கள் இயக்கி சோதிக்கப்பட்டன. இது தொடர்பாக, ரயில்வே பாதுகாப்பு ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், அவரது பரிந்துரைகளை ஏற்று, திருத்தம் செய்து மீண்டும் அறிக்கை அனுப்பப்பட்டது.

இதற்கிடையில், வேளச்சேரி பரங்கிமலை ரயில் வழித்தடத்தில் மார்ச் 10ம் தேதி மின்சார ரயில் சேவை தொடங்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்தது. இந்நிலையில், வேளச்சேரி பரங்கிமலை ரயில் வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர் ஜனக் குமார் கர்க் நேற்று ஆய்வு செய்தார்.

ஆய்வின் ஒரு பகுதியாக, பரங்கிமலை முதல் வேளச்சேரி வரை மோட்டார் டிராலி மூலம் விரிவான சோதனை நடத்தப்பட்டது. இதில் தண்டவாள அமைப்பு, ஜல்லிகளின் அளவு, சமன்பாடு, பயணத் தரம் ஆகியவை ஆராயப்பட்டன. மேலும் மேம்பாலக்கட்டமைப்புகள், மின்சார வழித்தடங்கள், சிக்னல் மற்றும் இன்டர்லாக்கிங் அமைப்புகள் உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகளை ஆணையர் ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து 9 பெட்டிகளைக் கொண்ட ஏசி மின்சார ரயிலில் அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இயக்க நிலைகளில் ரயிலின் அதிர்வுத் தன்மைகள், பிரேக் பிடிக்கும் திறன், தண்டவாளத்தின்வடிவியல் (track geometry), சிக்னல்களின் தெரிவுநிலை ஆகியவற்றை சோதிக்கப்பட்டன.

புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் புழுதிவாக்கம், ஆதம்பாக்கத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ரயில் நிலையங்களில் கட்டமைப்பு உறுதித்தன்மை, பயணிகள் நடமாடும் வசதி மற்றும் அணுகல் அம்சங்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டன.

சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். ஆய்வின்போது, சென்னை ரயில்வே கோட்ட மேலாளர் சைலேந்திர சிங், கூடுதல் கோட்டமேலாளர் தேஜ் பர்த்தாப் சிங், முதன்மை நிர்வாக அதிகாரி (கட்டுமானம்) எஸ்.கே. மவுரியா உட்பட பலர் உடனிருந்தனர்.

# தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் 500 பேருக்கு காலை சிற்றுண்டி வழங்கல்

மாதவரம், மார்ச்.7-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு தீர்த்தக்கிரியம்பட்டு திமுக சார்பில் 500 பேருக்கு காலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி செயலாளர் ஆர். ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.புழல் ஒன்றிய முன்னாள் துணைப் பெருந்தலைவர் சாந்தி பாஸ்கரன், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் இ.பாஸ்கரன், மாவட்ட தொண்டரணி தலைவர் ஜெ.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக புழல்



ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் கலந்து கொண்டு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புடன் காலை சிற்றுண்டியை வழங்கினார். இதில் ராஜேந்திரன், கஜபதி, டில்லிரமேஷ், தேவதாஸ், சுரேஷ், அந்தோணி, விஜயன், அருண்குமார், கபிலன், தேவானந்தம், மற்றும் கழக முன்னாள் நிர்வாகிகள் ஞானசேகரன், கருணாநிதி, மல்லிகாரவிச்சந்திரன், நெடுமாறன், அபிமன்னன், ஜோதி, நித்தியானந்தம், பாலு, இளஞ்சேரன், கோவிந்தராஜ், பாபு, பிரபாகரன், பிரித்தீவ்ராஜ், சாந்தபிரியன், நாகராஜ், மருதுபாண்டி, பிரேம்குமார், குரு, ஆடல், சேது, அருண், சிவா, 7இ பாஸ்கர், கௌதமன், ஸ்ரீதர், ராஜா, அன்பழகன், தேவராஜ், ராம்குமார், இன்னரசு, ஸ்ரீதர், தருண்பிரகாஷ், முருகன், தமிழ்செல்வி, ரதியா, கலைஞர் மதன், மணியம்மை, தமயந்தி, மணிமேகலை, ஜெயலட்சுமி, ராணி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர். முடிவில் புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.



# முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு 300க்கும் மேற்பட்டோர், மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் திமுகவில் இணைவு

கிருஷ்ணகிரி, மார்ச் .07-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு அரசியல் மற்றும் பொதுநிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தில் திமுக சார்பில் கட்சியில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சபரி ஏற்பாட்டில்,

மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் தலைமையில், பண்ணிஅள்ளி ஊராட்சியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். புதியதாக இணைந்தவர்களுக்கு கட்சித் துண்டு அணிவித்து வரவேற்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் காவேரிப்பட்டினம் மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் குமார், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் செல்வம், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் சின்ன பையன்,மந்திரி கவுண்டர் மாதன்,கிளை செயலாளர்கள் வேலு, தேவன், சிவா, திமுக தகவல் தொழில்நுட்ப அணி விஜய் ஆனந்த்,சந்தோஷ், மாணவரணி அசோக் குமார், கிரி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பேசிய நிர்வாகிகள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தில் நடைபெற்று வரும் மக்கள் நலத்திட்டங்களால் ஈர்க்கப்பட்டு பலர் திமுகவில் இணைந்து வருவது கட்சியின் வளர்ச்சிக்கு வலுசேர்க்கும் என தெரிவித்தனர். -

# மானாமதுரையில் மீண்டும் பயங்கரம்: அதிகாலையில் இருவருக்கு அரிவாள் வெட்டு - சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பு

மானாமதுரை மார்ச். 07-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அடுத்தடுத்து அரங்கேறும் வன்முறைச் சம்பவங்கள் பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. ரயில்வே காலனி பகுதியில் இருவர் மர்ம நபர்களால் ஓட ஓட விரட்டி வெட்டப்பட்ட சம்பவம் தற்போது பரப்பரப்பை கிளப்பியுள்ளது.சம்பவம் என்ன?

மானாமதுரை ரயில்வே காலனி, சீயோன் நகர் பகுதியில் அதிகாலை நேரத்தில் திடீர் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் மோதல் முற்றவே, அங்கிருந்த மர்ம நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன்



தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில்:

* ஜெயக்குமார் (ஜீவா நகர், மானாமதுரை) * அழகர் (ஆதனூர்) ஆகிய இருவரும் பலத்த காயமடைந்தனர். ரத்த வெள்ளத்தில் சரிந்த இருவரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு, சிகிச்சைக்காக உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.பதைபதைக்க வைக்கும் சிசிடிவி காட்சிகள் இந்தச் சம்பவம் தொடர்பாக தற்போது வெளியாகியுள்ள சிசிடிவி காட்சிகள் பார்ப்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. * ஒரு காட்சியில், இருசக்கர வாகனத்தில் வந்த இருவர், ஒருவரை அரிவாளால் ஓட ஓட விரட்டும் பயங்கரக் காட்சி பதிவாகியுள்ளது. * மற்றொரு காட்சியில், கையில் ஆயுதங்களுடன் மர்ம நபர் ஒருவர் இன்னொருவரை துரத்திச் செல்லும் காட்சியும் இடம்பெற்றுள்ளது. தொடரும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்கனவே கடந்த மார்ச் 3ம் தேதி, மானாமதுரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடைக்காட்டூர் மேல தெருவில், பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில் மூன்று இருசக்கர வாகனங்களில் வந்த கும்பல் தாக்குதல் நடத்தியது. அந்தச் சுவடு மறைவதற்குள், தற்போது ரயில்வே காலனி பகுதியில் அதிகாலையிலேயே நடந்த இந்த வெட்டுச் சம்பவம் சிவகங்கை மாவட்டத்தில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

காவல்துறை விசாரணை: தகவல் அறிந்து விரைந்து வந்த மானாமதுரை போலீசார், சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் தாக்குதலில் ஈடுபட்ட மர்ம நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். முன்விரோதம் காரணமாக இந்தத் தாக்குதல் நடந்ததா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்ற கோணத்தில் விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161